தினமணி
எமது செய்தியாளர்களை தொடர்புகொள்ள
கோவை	94425 04156
மேட்டுப்பாளையம்	94878 42563
பெ.நா.பாளையம்	98425 63953
சூலூர்	98422 44599
அன்னூர்	91502 49095
பொள்ளாச்சி	89034 44119
வடவள்ளி	98436 52523
வால்பாறை	94863 24619

தினமணி
சந்தா குறித்த விவரம் மற்றும் புகார்களுக்கு...
கோயம்புத்தூர்	: 97902 12447
மேட்டுப்பாளையம் & அன்னூர்	: 77088 26235
சூலூர்	: 73730 55255
மதுக்கரை	: 88701 48269
பொள்ளாச்சி	: 90435 00177

உதவி மைய எண் : 88070 00216

மேட்டுப்பாளையத்தில் கோயில் யானைகள் நலவாழ்வு முகாம்

அனைத்து துறை அதிகாரிகளுடன் ஆட்சியர் ஆலோசனை

மேட்டுப்பாளையம், நவ.11: மேட்டுப்பாளையத்துக்குள்பட்ட தேக்கம்பட்டி பவானி ஆற்றுப்படுகையில் கோயில் யானைகள் நலவாழ்வு முகாம் நடத்துவது தொடர்பாக அனைத்துத் துறை அதிகாரிகளுடன் ஆலோசிக்கப்பட்டது.

கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் அருகே உள்ள தேக்கம்பட்டி பவானி ஆற்றுப்படுகையில் இந்து சமய அறநிலையத் துறை சார்பில் நடைபெறவுள்ள யானைகள் நலவாழ்வு முகாம் தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்த அனைத்துத் துறை அலுவலர்களுடனான ஒருங்கிணைப்புக் கூட்டம், வனபத்ரகாளியம்மன் கோயில் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சியர் பவன்குமார் க.கிரியப்பனவர் தலைமையில் புதன்கிழமை நடைபெற்றது.

இதில் ஆட்சியர் பேசியதாவது:

யானைகள் நலவாழ்வு முகாமை சிறப்பாக நடத்தும் வகையில் வனம், காவல், நீர் வளம், மின்சார வாரியம், கால்நடை பராமரிப்பு, தீயணைப்பு, சுகாதாரம் மற்றும் மருத்துவம், நெடுஞ்சாலை, பொதுப்பணி உள்பட பல்வேறு துறை அலுவலர்கள் முன்னேற்பாடு பணிகளை சிறப்பாக செய்ய வேண்டும்.

முகாம் நடைபெறும் காலம் முழுவதும் யானைகளின் பாதுகாப்பை உறுதிசெய்ய உரிய கண்காணிப்பு பணிகளை வனத் துறையினர் மேற்கொள்ள வேண்டும். காவல் துறை சார்பில் போதிய காவலர்களை சுழற்சி முறையில் பணியமர்த்தி, போக்குவரத்து நெரிசல் ஏற்படாத வகையில் வாகன நிறுத்துமிடங்கள் மற்றும் மாற்றுப்பாதை வசதிகளை ஏற்படுத்த வேண்டும். பொதுமக்கள் பாதுகாப்பாக முகாமை பார்வையிட உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.



கோயில் யானைகள் நலவாழ்வு முகாம் தொடர்பாக மேட்டுப்பாளையம், வனபத்ரகாளியம்மன் கோயில் அலுவலகத்தில் புதன்கிழமை நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் பேசிய மாவட்ட ஆட்சியர் பவன்குமார் க.கிரியப்பனவர்.

யானைகள் குளிப்பதற்கு தேவையான நீரை பவானி ஆற்றில் இருந்து பெறுவதற்கான ஒத்துழைப்பை நீர்வளத் துறையினர் வழங்குவதுடன், முகாம் முழுவதும் தடையில்லா மின்சாரம் வழங்க வேண்டும். யானைகளை ஏற்றிவரும் லாரிகள் எந்தவித இடையூறுமின்றி பாதுகாப்பாக முகாம் நடைபெறும் பகுதிக்கு வந்து சேரும் வகையில் சாலைகளை சீரமைக்க வேண்டும்.

கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் கால்நடை மருத்துவர்களை சுழற்சி முறையில் பணியமர்த்தி, யானைகளுக்கு தினசரி மருத்துவப் பரிசோதனை மேற்கொண்டு தேவையான சிகிச்சைகள் வழங்குவதுடன், நோய் தொற்றுகள் ஏற்படாத வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்.

அனைத்துத் துறை அலுவலர்களும் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணிகளை ஒருங்கிணைந்து மேற்கொள்ள வேண்டும் என்றார்.

இந்தக் கூட்டத்தில் இந்து சமய அறநிலையத் துறை இணை ஆணையர் ரமேஷ், கோட்டாட்சியர் (வடக்கு) வினோத்குமார், துணை ஆணையர் சரவணன், உதவி ஆணையர் உஷா நந்தினி, செயற்பொறியாளர் திருநாவுக்கரசு, மேட்டுப்பாளையம் வட்டாட்சியர் சரவணகுமார் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

முன்னதாக, யானைகள் முகாம் நடைபெறும் இடத்தை அதிகாரிகளுடன் சென்று மாவட்ட ஆட்சியர் நேரில் ஆய்வு செய்தார்.

பொறியியல் பணி: திருச்சி–பாலக்காடு ரயில் பகுதியாக ரத்து

கோவை, நவ.11: ஈரோடு ரயில் நிலையப் பகுதியில் பொறியியல் பணிகள் மேற்கொள்ளப்படுவதால், திருச்சி-பாலக்காடு ரயில் பகுதியாக ரத்து செய்யப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக, சேலம் ரயில்வே கோட்ட நிர்வாகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

நவம்பர் 13,15 ஆகிய இரண்டு நாள்கள் திருச்சியில் இருந்து பிற்பகல் 1 மணிக்கு புறப்படும் திருச்சி-பாலக்காடு விரைவு ரயில் (எண்: 16843) திருச்சி-ஈரோடு இடையே இயக்கப்படும். ஈரோடு-பாலக்காடு இடையே முன்பதிவில்லாத சிறப்பு ரயில் இயக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அண்ணா பதக்கம் பெற டிச.7–க்குள் விண்ணப்பிக்கலாம்

கோவை, நவ.11: வீர, தீர செயல் புரிந்தவர்கள் அண்ணா பதக்கம் பெற டிசம்பர் 7–ஆம் தேதிக்குள் விண்ணப்பங்களை வழங்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக மாவட்ட ஆட்சியர் பவன்குமார் க.கிரியப்பனவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

வீர, தீர செயல்களில் ஈடுபட்டு உயிர் மற்றும் உடைமைகளைக் காப்பாற்றுவதில் சிறப்பான துணிச்சலான செயல்களைப் புரிந்த பொதுமக்கள் மற்றும் அரசு பணியாளர்களுக்கு 2027–ஆம் ஆண்டு குடியரசு தின விழாவின்போது, தமிழ்நாடு முதல்வர் மூலமாக அண்ணா பதக்கம் வழங்கப்பட உள்ளது.

அதன்படி, 2027–ஆம் ஆண்டு அண்ணா பதக்கம் பெற தகுதியானவர்கள், தமிழக அரசின் https://awards.tn.gov.in இணையதளத்தில் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் டிசம்பர் 7–ஆம் தேதிக்குள் விண்ணப்பத்தை பதிவேற்றம் செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் நவ.16–இல் பிரதமரின் தேசிய தொழில் பழகுநர் சேர்க்கை முகாம்

கோவை, நவ.11: கோவை அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில், பிரதமரின் தேசிய தொழில் பழகுநர் சேர்க்கை முகாம் வரும் 16–ஆம் தேதி நடைபெற உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் பவன்குமார் க.கிரியப்பனவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

தேசிய தொழில் பழகுநர் ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ், தமிழ்நாடு அரசு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை சார்பில் மாவட்ட அளவில் பிரதமரின் தேசிய தொழில் பழகுநர் சேர்க்கை முகாம் அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் வரும் 16–ஆம் தேதி காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெற உள்ளது. இந்த முகாமில் மத்திய, மாநில அரசு நிறுவனங்கள், பொதுத் துறை நிறுவனங்கள், மாவட்டத்தில் உள்ள தனியார் துறை நிறுவனங்கள் பங்கேற்று 300–க்கும் மேற்பட்ட காலியிடங்களை நிரப்ப உள்ளனர்.

இதில் பங்கேற்று தேர்வு பெற்றால் தொழில் பழகுநர் பயிற்சி அளிக்கப்பட்டு, மத்திய அரசின் தேசிய தொழிற்பழகுநர் சான்றிதழ் வழங்கப்படும். தேசிய தொழில் பழகுநர் சான்றிதழ் பெற்றவர்களுக்கு அரசு வேலைவாய்ப்பில் முன்னுரிமையும், வயது வரம்பில் மேலும் ஓராண்டு சலுகையும் உள்ளது.

தொழில் பழகுநர் பயிற்சியின்போது தொழிற்பிரிவுகளுக்கு ஏற்ப தொழில் நிறுவனங்களால் உதவித்தொகை வழங்கப்படுகிறது.

8–ஆம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு, பிளஸ் 2 முதல் பட்டப் படிப்பு வரை, டிப்ளமோ தேர்ச்சி, தோல்வி அடைந்தவர்கள், அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் தேர்ச்சி பெற்றவர்கள் உரிய அசல் சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்களுடன் பங்கேற்கலாம்.

மேலும் விவரங்களுக்கு உதவி இயக்குநர், மாவட்ட திறன் பயிற்சி அலுவலகம், அரசினர் தொழிற்பயிற்சி நிலைய வளாகம், கோவை 29 என்ற முகவரியை அணுகலாம். கூடுதல் விவரங்களுக்கு 9499055687, 9488462613, 9698091915 ஆகிய கைப்பேசி எண்களைத் தொடர்பு கொள்ளலாம் என்று குறிப்பிட்டுள்ளார்.

சட்டம்–ஒழுங்கைப் பாதுகாக்கும் வகையில் கோவை மாவட்டத்தில் விடியவிடிய சோதனை

1.6 கிலோ கஞ்சா பறிமுதல்; 22 பேர் கைது

கோவை, நவ.11: சட்டம்-ஒழுங்கைப் பாதுகாக்கவும், குற்றச் சம்பவங்களைத் தடுக்கவும் கோவை மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை இரவு முதல் புதன்கிழமை காலை வரை விடியவிடிய போலீஸார் சோதனை மேற்கொண்டனர்.

இதுதொடர்பாக மாவட்ட காவல் துறையினர் கூறியதாவது:

கோவை மாவட்டத்தில் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில், மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் பவன் கே.ரெட்டி உத்தரவின்பேரில் மாவட்டம் முழுவதும் செவ்வாய்க்கிழமை இரவு முதல் புதன்கிழமை அதிகாலை 5 மணி வரை சிறப்புத் தணிக்கை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்த சோதனையின்போது பழைய குற்றவாளிகள் மற்றும் ரெளடிகள் 18 பேரைப் பிடித்து காவல் நிலையங்களில் வைத்து போலீஸார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும், போதைப்பொருள் குற்றங்களில் தொடர்புடைய 16 பேர் தீவிர தணிக்கைக்கு உள்படுத்தப்பட்டனர். இதில் குற்றச் சம்பவங்களில் ஈடுபட்ட 3 பேர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து 1.6 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது.

இதேபோல, மாவட்டம் முழுவதும் நடைபெற்ற வாகனத் தணிக்கையில் மதுபோதையில் வாகனம் ஓட்டியதாக 60 வழக்குகளும், ஆபத்தான முறையில் வாகனம் ஓட்டியதாக 9 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டு 14 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

பொது இடங்களில் அமர்ந்து மது அருந்தி பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்திய 19 பேர் கைது செய்யப்பட்டு வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளன. மேலும், நீதிமன்றங்களால் பிறப்பிக்கப்பட்டு நீண்ட நாள்களாக நிலுவையில் இருந்த 6 பிடியாணைகளும் (வாரண்ட்) இந்தச் சோதனையின்போது நிறைவேற்றப்பட்டது என்றனர்.

தூய்மைப் பணியாளர்கள் போராட்டம் ஒத்திவைப்பு

மாநகரில் தேங்கிய குப்பை அகற்றும் பணி தீவிரம்

கோவை, நவ. 11: ஒப்பந்தத் தூய்மைப் பணியாளர்களின் போராட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில், கோவை மாநகரப் பகுதிகளில் தேங்கிய தீபாவளிக் குப்பை அகற்றும் பணி தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கோவை மாநகராட்சியில் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஒப்பந்தத் தூய்மைப் பணியாளர்கள் பணிபுரிகின்றனர். தினக்கூலி அடிப்படையில் அவர்களின் வங்கிக் கணக்கில் மாத ஊதியம் வரவு வைக்கப்படுகிறது.

இந்நிலையில், குறைந்தபட்ச தினசரி ஊதியம் ரூ.798 வழங்க வேண்டும், ஒப்பந்ததாரர்களால் நிலுவையில் உள்ள ஊதியத்தொகையை உடனடியாக வழங்க வேண்டும், பணி நிரந்தரம் குறித்து பரிசீலிக்க வேண்டும் என்பது உள்பட 32 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி அண்ணல் அம்பேத்கர் துப்புரவு, பொதுப்பணியாளர்கள் சங்கம், சமூக நீதிக் கட்சி சங்கம், உழைப்போர் உரிமை இயக்கம், அண்ணா சுகாதாரப் பணியாளர் சங்கம் உள்ளிட்ட 6 சங்கங்களைச் சேர்ந்த ஒப்பந்தத் தூய்மைப் பணியாளர்கள் திங்கள்கிழமை முதல் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இரண்டு நாள்கள் நடைபெற்ற போராட்டத்தால் சிங்காநல்லூர், உக்கடம், காந்திபுரம், சரவணம்பட்டி உள்பட மாநகரின் பல்வேறு பகுதிகளில் குப்பை தேக்கமடைந்தன. இதையடுத்து போராட்டத்தில் ஈடுபட்ட தூய்மைப் பணியாளர்கள் சங்க நிர்வாகிகளுடன் மாநகராட்சி ஆணையர் கட்டா ரவிதேஜா செவ்வாய்க்கிழமை இரவு பேச்சுவார்த்தை நடத்தினார்.

அப்போது பணி நிரந்தரம், ஊதிய உயர்வு குறித்து தமிழக அரசின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மீதமுள்ள கோரிக்கைகளை நிறைவேற்ற ஒரு மாதம் அவகாசம் வேண்டும் எனக் கூறினார்.



தூய்மைப் பணியாளர்கள் போராட்டம் ஒத்திவைக்கப்பட்ட நிலையில், குப்பை அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள ஊழியர்.

இதையடுத்து, மாநகராட்சி தூய்மைப் பணியாளர்களின் பணி புறக்கணிப்பு போராட்டம் தற்காலிகமாக ஒத்திவைக்கப்படுவதாக, அனைத்து தொழிற்சங்க கூட்டமைப்பு நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

கூட்டமைப்பின் கோரிக்கையை ஒரு மாதத்துக்குள் முடித்து தருவதாக மாநகராட்சி ஆணையர் உறுதியளித்ததையடுத்து, தூய்மைப் பணியாளர்களின் தொடர் வேலை நிறுத்தப் போராட்டம் தற்காலிகமாக ஒத்திவைக்கப்படுகிறது. இதனால், பணியாளர்கள் அனைவரும் பணிக்கு செல்லலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து, தூய்மைப் பணியாளர்கள் புதன்கிழமை காலை முதல் பணிக்கு திரும்பினர். மாநகரில் தேங்கிய குப்பை அகற்றும் பணி தீவிரமாக மேற்கொள்ளப்பட்டது.

டாடாபாத் மின் வாரிய அலுவலகத்தில் களப் பணிக்கான உடல் தகுதித் தேர்வு

கோவை, நவ.11: கோவை, டாடாபாத் மின்வாரிய வளாகத்தில் மின் கம்பத்தில் ஏறி பணிபுரியும் களப் பணியாளர்களுக்கான உடல் தகுதித் தேர்வு புதன்கிழமை நடைபெற்றது.

தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் சார்பில் மாநிலம் முழுவதும் மின் கம்பத்தில் ஏறி பணிபுரியும் களப் பணியாளர்கள் தேர்வு செய்யப்பட உள்ளனர். இதற்காகத் தேர்வு எழுதியவர்களுக்கு புதன்கிழமை (நவ.11) முதல் நவம்பர் 13–ஆம் தேதி வரை உடல் தகுதித் தேர்வு நடைபெறுகிறது.

அதன்படி, கோவை மண்டலத்துக்குள்பட்ட மாவட்டங்களில் பணிபுரிய தேர்வு செய்யப்பட உள்ள மின் களப் பணியாளர்களுக்கான உடல் தகுதித் தேர்வு டாடாபாத்தில் உள்ள மின் பகிர்மானக் கழக அலுவலகத்தில் புதன்கிழமை நடைபெற்றது.

தகுதித் தேர்வுக்கு 356 பேர் அழைக்கப்பட்டிருந்தனர். இதில், புதன்கிழமை 150 பேருக்கு உடல் தகுதித் தேர்வு நடைபெற்றது. மீதமுள்ளவர்களுக்கான தேர்வு வியாழன், வெள்ளிக்கிழமைகளில் நடைபெற உள்ளது. இந்தத் தேர்வில் ஆண்களுக்கு நிகராக மகளிரும் பங்கேற்றனர்.

மின் கம்பம் ஏறுதல், மின்சார உபகரணங்களுடன் மின் கம்பத்தில் 8 நிமிடங்களுக்குள் ஏறி இறங்குதல் உள்ளிட்ட சவாலான தேர்வில் மகளிர் ஆர்வத்துடன் பங்கேற்றனர். தேர்வையொட்டி, வெளிநபர்கள் மின்வாரிய அலுவலகத்துக்குள் அனுமதிக்கப்படவில்லை.

சக்தி சுகர்ஸ் லிமிடெட்
CIN: L15421TZ1961PLC000396
பதிவு அலுவலகம் : சக்திநகர் - 638 315, பவானி தாலுகா, ஈரோடு மாவட்டம், தமிழ்நாடு தொலைபேசி : 0422-4322222, 2221551
மின்னஞ்சல் : shares@sakthisugars.com இணையதளம் : www.sakthisugars.com
30.09.2026 தேதியன்று முடிவடைந்த காலாண்டு / முடிவடைந்த காலத்திற்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலைப் பலன்களின் சுருக்கம்
(ரூபாய் இலட்சங்களில்)

விபரங்கள்	முடிவடைந்த காலாண்டிற்கு		முடிவடைந்த காலத்திற்கு		முடிவடைந்த முழு ஆண்டு
	30.09.2026	30.09.2025	30.09.2026	30.09.2025	31.03.2026
	(தணிக்கை செய்யப்படாதது)		(தணிக்கை செய்யப்படாதது)		(தணிக்கை செய்யப்பட்டது)
1. செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம்	36,351.14	16,826.89	74,042.13	47,069.30	89,897.02
2. நிகர லாபம் / (நஷ்டம்) (வரி, தனித்துவ இனங்களுக்கு முன்)	3,828.55	(3,207.66)	3,587.54	(3,397.58)	3,811.09
3. வரிக்குமுன் நிகர லாபம் / (நஷ்டம்) (தனித்துவ இனங்களுக்கு பின்)	3,828.55	(3,207.66)	3,587.54	(3,397.58)	3,811.09
4. வரிக்குப் பின் நிகர லாபம் / (நஷ்டம்) (தனித்துவ இனங்களுக்கு பின்)	3,125.21	(2,306.13)	2,942.26	(2,416.21)	2,813.45
5. மொத்த விரிவான வருமானம் [லாபம் / (நஷ்டம்) உள்ளடக்கியது (வரிக்கு பின்) மற்றும் பிற மொத்த விரிவான வருமானம் (வரிக்கு பின்)]	2,963.97	(2,249.20)	2,844.19	(2,306.95)	2,957.20
6. சாதாரண பங்கு மூலதனம்	11,884.90	11,884.90	11,884.90	11,884.90	11,884.90
7. ஒதுக்கீடுகள் (மறு மதிப்பீடு ஒதுக்கீடைத் தவிர) தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கையில் உள்ளபடி					10,937.15
8. ஒரு பங்கு (ரூ. 10/- முகமதிப்பு) ஈட்டிய வருமானம் (ரூபாயில்) (காலாண்டு விபரங்கள் வருட அடிப்படையில் மாற்றப்படவில்லை)					
- அடிப்படை	2.63	(1.94)	2.48	(2.03)	2.37
- குறைநிலை	2.63	(1.94)	2.48	(2.03)	2.37

விரிவான நிதிநிலை முடிவுகளுக்கு QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்
முந்தைய காலத்தின் / ஆண்டின் புள்ளி விவரங்கள் தேவையான இடங்களில் மறு தொகுப்பு / மறுவகைப்படுத்தப்பட்டுள்ளது.
குறிப்பு : மேலே கொடுக்கப்பட்டுள்ள காலாண்டுக்கான நிதிநிலைப் பலன்கள் SEBI (பட்டியலின்படியான பொறுப்புகள் மற்றும் வெளியீட்டுத் தேவைகள்) விதிகள் 2015 - விதி 33-ன் படி பங்குச் சந்தைகளுக்கு அளிக்கப்பட்ட விவரமான நிதிநிலைப் பலன்களின் சுருக்கமாகும். இந்த காலாண்டின் விரிவான நிதிநிலை பலன்கள் மும்பை பங்குச் சந்தையின் இணையதளம் (www.bseindia.com), நேஷனல் பங்குச் சந்தையின் இணையதளம் (www.nseindia.com) மற்றும் கம்பெனியின் இணையதளத்திலும் (https://www.sakthisugars.com/investor/FinancialResult.aspx) காணப்பெறலாம். கீழே கொடுக்கப்பட்டுள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்வதன் மூலமாகவும் இதனை காணலாம்.
கோயம்புத்தூர்
11.11.2026
சக்தி சுகர்ஸ் லிமிடெட்டிற்காக
(மு.பாலசுப்ரமணியம்)
நிர்வாக இயக்குநர்
DIN : 00377053

INDEL MONEY
Corporate office: Indel Money Limited, IIIrd Floor Indel House, Changampuzha Nagar, South Kalamassery, Ernakulam -682033, Ph: 0484-2933999 E:customercare@indelmoney.com
GOLD AUCTION NOTICE

எங்களுடைய பல்வேறு கிளைகளில் அடகு வைக்கப்பட்ட தங்க நகைகள் 14-12-2026 தேதி காலை 11:00 மணிக்கு கீழே கொடுக்கப்பட்டுள்ள கிளையில் வைத்து பகிரங்க ஏலம் விடப்படும் என்பதனை இதன் மூலம் தெரியப்படுத்தி கொள்கிறோம். நகை கடன் பெற்றும் வட்டி செலுத்தாமல் மீட்காமல் விட்ட நகைகளைத்தான் ஏலம் விடுவதாக முடிவு செய்யப்பட்டுள்ளது. ஏலத்தில் விடப்படும் கடன் எண்களின் விபரம் அந்தந்த கிளைகளின் அறிவிப்பு பலகையில் ஒட்டப்பட்டுள்ளது. இதற்கு மேல் எந்த அறிவிப்பும் செய்யப்படமாட்டாது.

நரசிம்மநாயக்கன்பாளையம் - 10305140007728, 0514/07730, 10305150007627, 0515/07630, 0515/07633, 0515/07634, 0515/07641, 0515/07642, 0515/07643, 0515/07648, 0515/07649, 0515/07650, 0515/07651, 0515/07652, 0515/07669, 0515/07673, 0515/07674, 0515/07675, 0515/07676, 0515/07677, 0515/07678, 0515/07684, 0515/07685, 0515/07691, 0515/07694, 0515/07696, 0515/07700, 0515/07703, 0515/07722, **மேட்டுப்பாளையம்** – 10105150012796, 0515/12797, 0515/12800, 0515/12803, 0515/12806, 0515/12810, 0515/12817, 0515/12818, 0515/12819, 0515/12820, 0515/12822, 0515/12826, 0515/12827, 0515/12828, 0515/12834, 0515/12853, 0515/12858, 0515/12865, 0515/12869, 0515/12870, 0515/12871, 0515/12872, 0515/12873, 0515/12877, 0515/12881, 0515/12882, 0515/12884, 0515/12885, 0515/12891, 0515/12892, 0515/12894, 0515/12895, 0515/12896, 0515/12897, 0515/12901, 0515/12902, 0515/12903, 0515/12904, 0515/12905, 0515/12906, 0515/12909, 0515/12912, 0515/12913, 0515/12916, 0515/12920, 0515/12921, 0515/12922, 0515/12923, 0515/12925, 0515/12932, 0515/12933, 0515/12934, 0515/12935, 0515/12941, 0515/12942, 0515/12943, 0515/12959, 0515/12967, 0515/12970, 0515/12994, 0515/12997, 0515/13000, **பொள்ளாச்சி** - 11505150017077, 0515/17079, 0515/17084, 0515/17096, 0515/17123, 0515/17126, 0515/17131, 0515/17148, 0515/17149, 0515/17150, 0515/17157, 0515/17164, 0515/17167, 0515/17168, 0515/17169, 0515/17170, 0515/17171, 0515/17175, 0515/17177, 0515/17180, 0515/17181, 0515/17182, 0515/17183, 0515/17184, 0515/17189, 0515/17190, 0515/17191, 0515/17192, 0515/17195, 0515/17198, 0515/17204, 0515/17220, 0515/17223, 0515/17228, 0515/17229, 0515/17236, 0515/17238, 0515/17241, 0515/17242, 0515/17244, 0515/17245, 0515/17249, 0515/17253, 0515/17258, 0515/17259, 0515/17260, 0515/17261, 0515/17265, 0515/17269, 0515/17270, 0515/17271, 0515/17277, 0515/17279, 0515/17281, 0515/17283, 0515/17290, 0515/17292, 0515/17293, 0515/17294, 0515/17296, 0515/17306, 0515/17317, 0515/17320,0515/17321, 0515/17383, 0515/17390, 0515/17391, 0515/17396, 0515/17397, 0515/17399, **பல்லடம்** – 6305140014703, 0514/14710, 6305150014392, 0515/14416, 0515/14422, 0515/14434, 0515/14436, 0515/14446, 0515/14463, 0515/14473, 0515/14475, 0515/14481, 0515/14482, 0515/14488, 0515/14501, 0515/14502, 0515/14514, 0515/14516, 0515/14517, 0515/14524, 0515/14529, 0515/14530, 0515/14532, 0515/14533, 0515/14537, 0515/14540, 0515/14546, 0515/14550, 0515/14556, 0515/14559, 0515/14561, 0515/14566, 0515/14569, 0515/14575, 0515/14579, 0515/14580, 0515/14582, 0515/14583, 0515/14585, 0515/14586, 0515/14587, 0515/14588, 0515/14591, 0515/14595, 0515/14604, 0515/14613, 0515/14614, 0515/14615, 0515/14616, 0515/14622, 0515/14623, 0515/14632, 0515/14640, 0515/14641, 0515/14644, 0515/14645, 0515/14658, 0515/14671, 0515/14692, 0515/14694, 0515/14698, 0515/14702, 0515/14705,0515/14707, **பூமார்க்கெட்**- 7705150011897, 0515/11899, 0515/11908, 0515/11912, 0515/11921, 0515/11927, 0515/11934, 0515/11935, 0515/11947, 0515/11976, 0515/11977, 0515/11992, 0515/12001, 0515/12002, 0515/12010, 0515/12011, 0515/12017, 0515/12021, 0515/12023, 0515/12025, 0515/12028, 0515/12031, 0515/12040, 0515/12042, 0515/12048, 0515/12049, 0515/12052, 0515/12056, 0515/12058, 0515/12059, 0515/12062, 0515/12063, 0515/12064, 0515/12065, 0515/12070, 0515/12075, 0515/12077, 0515/12082, 0515/12083, 0515/12084, 0515/12087, 0515/12091, 0515/12092, 0515/12096, 0515/12097, 0515/12100, 0515/12102, 0515/12104, 0515/12136, 0515/12139, 0515/12142, 0515/12143, 0515/12146, 0515/12148, **சுந்தராபுரம்** – 6005140015606, 0514/15607, 0514/15616, 0514/15626, 6005150015300, 0515/15301, 0515/15302, 0515/15329, 0515/15342, 0515/15383, 0515/15384, 0515/15399, 0515/15401, 0515/15408, 0515/15410, 0515/15426, 0515/15427, 0515/15433, 0515/15435, 0515/15436, 0515/15446, 0515/15447, 0515/15449, 0515/15452, 0515/15453, 0515/15457, 0515/15462, 0515/15465, 0515/15468, 0515/15477, 0515/15478, 0515/15480, 0515/15483, 0515/15484, 0515/15487, 0515/15488, 0515/15491, 0515/15505, 0515/15520, 0515/15523, 0515/15526, 0515/15529, 0515/15531, 0515/15540, 0515/15555, 0515/15564, 0515/15572, 0515/15573, 0515/15576, 0515/15613, **தாராபுரம்** - 8905150017429, 0515/17431, 0515/17447, 0515/17456, 0515/17472, 0515/17478, 0515/17480, 0515/17483, 0515/17485, 0515/17487, 0515/17502, 0515/17503, 0515/17504, 0515/17505, 0515/17516, 0515/17517, 0515/17518, 0515/17524, 0515/17526, 0515/17527, 0515/17528, 0515/17529, 0515/17537, 0515/17538, 0515/17548, 0515/17555, 0515/17557, 0515/17575, 0515/17576, 0515/17577, 0515/17582, 0515/17593, 0515/17597, 0515/17599, 0515/17600, 0515/17601, 0515/17603, 0515/17605, 0515/17608, 0515/17609, 0515/17620, 0515/17622, 0515/17634, 0515/17636, 0515/17637, 0515/17638, 0515/17643, 0515/17648, 0515/17649, 0515/17650, 0515/17651, 0515/17656, 0515/17658, 0515/17660, 0515/17668, 0515/17673, 0515/17680, 0515/17682, 0515/17684, 0515/17686, 0515/17689, 0515/17692, 0515/17699,0515/17701, 0515/17702, 0515/17703, 0515/17704, 0515/17708, 0515/17715, 0515/17723, 0515/17724, 0515/17737, 0515/17738, 0515/17739, 0515/17742, 0515/17768, 0515/17777, 0515/17784, **இடையர்பாளையம்** - 6105150009044, 0515/09045, 0515/09051, 0515/09052, 0515/09053, 0515/09054, 0515/09064, 0515/09074, 0515/09084, 0515/09093, 0515/09095, 0515/09099, 0515/09100, 0515/09101, 0515/09102, 0515/09103, 0515/09104, 0515/09105, 0515/09106, 0515/09108, 0515/09113, 0515/09114, 0515/09115, 0515/09116, 0515/09117, 0515/09118, 0515/09119, 0515/09120, 0515/09123, 0515/09137, 0515/09138, 0515/09139, 0515/09142, 0515/09143, 0515/09148, 0515/09154, 0515/09156, 0515/09157, 0515/09168, **ஷிவானந்தா காலனி** - 7805150010984, 0515/10985, 0515/10986, 0515/10989, 0515/10995, 0515/10999, 0515/11002, 0515/11013, 0515/11019, 0515/11024, 0515/11031, 0515/11032, 0515/11036, 0515/11038, 0515/11040, 0515/11041, 0515/11047, 0515/11048, 0515/11049, 0515/11051, 0515/11054, 0515/11059, 0515/11060, 0515/11063, 0515/11064, 0515/11069, 0515/11074, 0515/11077, 0515/11078, 0515/11081, 0515/11087, 0515/11088, 0515/11094, 0515/11097, 0515/11098, 0515/11099, 0515/11102, 0515/11105, 0515/11107, 0515/11108, 0515/11113, 0515/11120, 0515/11122, 0515/11125, 0515/11126, 0515/11127, 0515/11130, 0515/11131, 0515/11132, 0515/11133, 0515/11138, 0515/11145, 0515/11146, 0515/11149, 0515/11168, 0515/11169, 0515/11171, 0515/11172, 0515/11175, 0515/11176, 0515/11177, 0515/11179, **திருப்பூர்** – 13805150006987, 0515/06991, 0515/06992, 0515/06996, 0515/06999, 0515/07000, 0515/07001, 0515/07003, 0515/07005, 0515/07006, 0515/07008, 0515/07009, 0515/07012, 0515/07013, 0515/07019, 0515/07020, 0515/07021, 0515/07028, 0515/07029, 0515/07034, 0515/07041, 0515/07047, 0515/07048, 0515/07050, 0515/07057, 0515/07058, 0515/07059, 0515/07060, 0515/07064, 0515/07065, 0515/07071, 0515/07072, 0515/07076, 0515/07078, 0515/07084, 0515/07086, 0515/07088, 0515/07089, 0515/07100, 0515/07101, 0515/07102, 0515/07107, 0515/07111, 0515/07117, 0515/07130, 0515/07132, 0515/07137, 0515/07139, **உக்கடம்** - 6205140009284, 0514/09287, 0514/09289, 0514/09295, 0514/09297, 0514/09299, 0514/09300, 0514/09301, 0514/09303, 6205150009081, 0515/09090, 0515/09093, 0515/09094, 0515/09101, 0515/09105, 0515/09113, 0515/09118, 0515/09119, 0515/09126, 0515/09128, 0515/09131, 0515/09134, 0515/09135, 0515/09137, 0515/09138, 0515/09139, 0515/09140, 0515/09149, 0515/09150, 0515/09152, 0515/09153, 0515/09161, 0515/09166, 0515/09167, 0515/09169, 0515/09171, 0515/09173, 0515/09174, 0515/09180, 0515/09183, 0515/09184, 0515/09185, 0515/09189, 0515/09199, 0515/09200, 0515/09201, 0515/09207, 0515/09210, 0515/09211, 0515/09218, 0515/09239, 0515/09240, 0515/09241, 0515/09248, 0515/09257,

அறிவிக்கப்பட்ட தேதியில் கிளையின் ஏலம் நிறைவடையவில்லை என்றால், Shriram Automall India Limited (SAMIL) மூலம் அவர்களின் ஆன்லைன் இ-ஏல தளமான https://gold.samil.in மற்றும் e-Procurement Technologies Limited (AuctionTiger) மூலம் அவர்களின் ஆன்லைன் இ-ஏல தளமான https://egold.auctiontiger.net வழியாக 16-12-2026 தேதி 12.30 PM முதல் 3.30 PM வரை நடைபெறும். 16-12-2026 தேதி அன்று ஈ-ஏலம் நிறைவடையவில்லை என்றால், அதே விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் அடுத்த வேலை நாட்களில் மீண்டும் ஏலம் விடப்படும்.
இன்டல்மணி லிமிடெட், அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி

AMBIKA COTTON MILLS LIMITED
Regd. Office : 15/9A, Valluvar Street, Sivanandha Colony, Coimbatore - 641 012.
CIN : L17115TZ1988PLC002269
0422 2491504 | www.acmills.in | ambika@acmills.in

STATEMENT OF UNAUDITED FINANCIAL RESULTS FOR THE QUARTER /HALF YEAR ENDED 30/09/2026
(Rs. In Lakhs,except per share data)

Particulars	Quarter Ended			Half Year Ended		Year Ended
	30.09.2026	30.06.2026	30.09.2025	30.09.2026	30.09.2025	31.03.2026
	Unaudited			Unaudited		Audited
1. Total Income from Operations	26799	26124	20310	52923	39837	79619
2. Operating Profit	4377	4273	3015	8650	6037	12943
3. Finance Cost	240	295	339	535	742	1268
4. Gross Profit	4137	3978	2676	8115	5295	11675
5. Depreciation	550	524	515	1074	1003	2056
6. Net profit/(Loss) for the period (before tax and exceptional items)	3587	3454	2161	7041	4292	9619
7. Net profit/(Loss) for the period before tax (after exceptional items)	3587	3454	2161	7041	4292	9619
8. Net profit/ (Loss) for the period after tax (after exceptional items)	2688	2570	1594	5258	3186	7156
9. Other Comprehensive Income	0	0	0	0	0	-12
10. Total Comprehensive income for the period (Comprising Profit / (Loss) for the period (after tax)	2688	2570	1594	5258	3186	7144
11. Equity Share Capital	572.5	572.5	572.5	572.5	572.5	572.5
12. Reserves (excluding Revaluation Reserve) as per Audited Balance Sheet	-	-	-	-	-	94859
13. Earnings Per Share (of Rs.10/- each) (for Continuing and discontinued operations) a) Basic	46.95	44.89	27.85	91.84	55.65	125.00
b) Diluted	46.95	44.89	27.85	91.84	55.65	125.00

Note : The above is an extract of the detailed format of Quarter/Half Year Financial Results ended 30th Septemeber, 2026 filed with the Stock Exchanges under Regulation 33 of the SEBI (Listing Obligation and Disclosure requirements) Regulations, 2015. The full format of the Unaudited Financial Results for the Quarter/ Half year ended 30th Septemeber 2026 are available on the Company's websites www.acmills.in and on the websites of BSE(www.bseindia.com) & NSE (www.nseindia.com)

Place : Coimbatore
Date : 11.11.2026
For Ambika Cotton Mills Limited
S/d
P.V.Chandran,
Chairman & Managing Director
DIN : 00628479